விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 033 வள்ளுவர் ஆண்டு 2054 தை 07 சனிக்கிழமை (21.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## 13ஆவது திருத்தமே உடனடிச் சாத்தியம்

### தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் ஜெய்சங்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசிலயமைப்பில் அதிகாரப் பகிர்வு விடயங்களை உள்ளடக்கியதாக காணப்படும் 13ஆவது திருத்தச் சட்டத்தினையே உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்குரிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

நுவரெலியாவில் நேற்றிரவு

## கோர விபத்து; எழுவர் பலி

### 47 பேர் படுகாயம்



(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டம், நானு ஓயா ரதல்ல குறுக்கு வீதியின் சமர்செட் பகுதியில் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி 11

## 13வது திருத்தச் சட்டம், மாகாண சபைத் தேர்தல்

### அதிகாரப் பகிர்வுக்கு மிகவும் அவசியமானது

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்

(கொழும்பு)

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதும் மாகாண சபைத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதும் அரசியல் அதிகாரப் பகிர்வு அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு மிகவும் முக்கியமானது என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## குறைந்தது முட்டையின் விலை

(கொழும்பு)

முட்டையின் புதிய விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, வெள்ளை முட்டை 11

## நிதியமைச்சுக்கு முன்பாக நேற்று போராட்டம்

(கொழும்பு)

நிதி அமைச்சுக்கு அருகில் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வங்கி ஊழியர்கள், வைத்தியர்கள் 11

## கடன் மறுசீரமைப்புக்கு முதலாவதாக உதவியது இந்தியா - அலி சப்ரி

(கொழும்பு)

இலங்கைக்கு கடந்த ஆண்டு வழங்கிய சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனுதவிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்திடம் முதலாவதாக தமது நிதியியல் உத்தரவாதத்தை 11



## கிளிநொச்சியில் இரண்டாக பிளவடைந்தது தமிழரசு

(கிளிநொச்சி)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக இலங்கை தமிழரசுக் கட்சி வேட்புமனு தாக்கல் செய்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த 18ஆம் திகதி வேட்புமனு கையளிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி 11

## குளத்தில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் கரவெட்டிக் குளத்தைப் பார்க்கச் சென்ற சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரி 11

## இலங்கை ஜனநாயக நாடுதானா? உலகம் அவதானிக்க வேண்டும்

### பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை ஒரு ஜனநாயக நாடுதானா என்பதை உலகம் அவதானிக்க வேண்டும் என்று சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது நிறைவேற்றுத்துறை, 04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி அவுஸ்திரேலிய, கனேடிய மற்றும் சிங்கப்பூர் டொலர்கள் மற்றும் யூரோ , ஸ்டெர்லிங் பவுண்ட் மற்றும் சுவிஸ் பிராங்கிற்கு எதிராக ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது.

இருப்பினும், அமெரிக்கடொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு மாறாமல் உள்ளதுடன் இதன் விற்பனை விலை ரூ. 371.39 சதமாக உள்ளதெனவும் இல ங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.(4,7)

## மரண அறிவித்தல்

### சிவசம்பு வன்னியசேகரம்



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு வன்னியசேகரம் அவர்கள் 20.01.2023 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சிவசம்பு - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்ம லிங்கம் - பரமேஸ்வரி தம்பதி யினரின் அன்பு மருமகனும் யோகராணியின் (சந்திரா ரீச்சர்) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.01.2023 ) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
த.நந்தகுமாரன் (மைத்துனர்)
077 129 8159

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். (14344)

## மரண அறிவித்தல்

### அருள்தாஸ் வேலாயுதம் கிறிஸ்றீன்னம்மா (கிறேசி)

(ஓய்வு பெற்ற அதிபர் - கிளிநொச்சி தெற்கு வலயம்)



நெடுந்தீவைப் பிறப்பிட மாகவும் இல.197, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை நிரந்தர வதி விடமாகவும் கொண்ட அருள் தாஸ் வேலாயுதம் கிறிஸ்றீன் னம்மா (கிறேசி) (ஓய்வு பெற்ற அதிபர் - கிளிநொச்சி தெற்கு வலயம்) அவர்கள் 20.01.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந் தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் நாகமணி - கமலம்மா தம்ப தியரின் ஆசை மருமகளும் அருள்தாஸ் வேலாயுதம் (நாகேந்திரன்) அவர்களின் பாசமிகு மனைவியும் றஜிலக்ஷன் (உயர் தொழில்நுட்ப கல்லூரி யாழ்ப்பாணம்), ஆன் துவாரகா ஆகியோரின் ஆருயிர் தாயாரும் காலஞ்சென்றவர்களான தங்கம், மலர், றொபட் மற்றும் றஞ்சினி (வன்னேரி), அன்ரன் டயஸ் (அதிபர் புத்து வெட்டுவான் அ.த.க பாடசாலை), பவானி (விவேகானந்தநகர்), ஜெனிற்றா, யூட் (கனடா), அன்ரன் நிமல்ராஜ் (ஆசிரியர் - பெரியபுளியங்குளம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குணவதி, செல்வமலர், விஜயலட்சுமி, விமலா, மாலா மற்றும் காலஞ்சென்ற சிவநாதன் காலஞ்சென்ற செல்லா மற்றும் கிறேசியன், அமலதாஸ் (டெசியன்), ஜெயசீலி, விமலசேகர், பகிதா, நகுலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.01.2023 அன்று அன்னாரின் இல்லத்திலிருந்து காலை 10.00 மணியளவில் எடுக்கப்பட்டு ஸ்கந்தபுரம் அந்தோனியார் ஆலயத்தில் ஆராதனைக்காக வைக்கப்பட்டு பின்பு பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஸ்கந்தபுரம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
(14349) குடும்பத்தினர்

## இறப்பு அறிவித்தல்

### காசிப்பிள்ளை சதாசிவம்



பிறப்பு 03.03.1930
இறப்பு 18.01.2023

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை சதாசிவம் அவர்கள் கடந்த 18.01.2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேஸ்வரன் காலஞ்சென்ற ஜெயலஷ்சுமி, லோகேஸ்வரன், காலஞ்சென்ற தமிழரசுவரன், சத்தியவாகிஸ்வரன், மங்க ளேஸ்வரன், திருக்கேதீஸ்வரன், திலகலக்சுமி, காலஞ்சென்ற நவலக்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்ரா, சரஸ்வதி, லக்கினேஸ்வரி, நந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயலஷ்சுமி, அர்ச்சுனா, கஸ்தூரி, சுதந்தன், பிரியந்தன், மயூரன், அர்ச்சனா மயூரன், கீர்த்தனா, ஹரிஷ், விஸ்னா, கார்த்திகன், கபிலன், அபிராமினி, மதுரன் ஆகி யோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.127/10, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்பு:- 076 692 6558

(14338)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துகளின் விலை அதிகரிப்பால்

# அரச மருத்துவமனையில் அதிகரிக்கும் நோயாளர்கள்

(கொழும்பு)

**தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் மற்றும் மருந்துகளின் விலை அதிகரிப்பு காரணமாக அரச மருத்துவமனைகளில் நோயாளர்களின் வருகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இதன்காரணமாக வெளி நோயாளர் சிகிச்சை பிரிவுகள் மற்றும் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு காரணமாக சிரமத்திற்குள்ளாகும் நிலை காணப்படுவதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக வெளியில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

## பதவி விலகினார் முஜிபுர்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளக்கிழமை விசேட அறிவிப்பு ஒன்றினை வெளியிட்ட அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில், கொழும்பு மாநகர சபைக்காக போட்டியிடவுள்ளமை காரணமாகவே இந்த தீர்மானத்தினை எடுத்துள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழு ஏகமானதான முடிவின் பிரகாரம் தான் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அமைதியான முறையில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வழிவகுக்குமாறு, தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

## உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் மாகாண சபைத் தேர்தல்-பிரசன்ன ரணதுங்க



(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் கம்பஹா மாவட்டத்திற்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை ஒத்திவைப்பதற்காக அல்ல தேர்தலை நடத்துவதற்காகவே வேட்புமனு கோரப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கட்டுப்பணத்தினை செலுத்துவதற்கான கால எல்லை நிறைவடைந்தது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் கால அவகாசம், நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமானதிலிருந்து, பல அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை வைப்புச் செய்துள்ளனர்.

இதனிடையே, 10 அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்களை நேற்று முன்தினம் தாக்கல் செய்தன. (நி)

## ஐ.தே.க வுடன் இணைந்து போட்டியிடுகிறது இ.தொ.கா

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் கூட்டணியாக போட்டியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு கட்சிகளும் ஒன்பது முதல் 10 உள்ளூராட்சி மன்றங்களில் யானை சின்னத்திலும், 11 முதல் 12 வரையான பிரதேச சபைகளில் சேவல் சின்னத்திலும் போட்டியிடவுள்ளதாகவும் தேர்தல் உடன்படிக்கை இரு கட்சிகளுக்கும் நன்மை பயக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான இழப்பீடு வழங்க வேண்டும்

### ஐ.நா மனித உரிமை அலுவலகம் கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக இழப்பீடு வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேபோல் உண்மையைக் கண்டறியவும் நீதியை உறுதிப்படுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான இழப்பீடுகளை வழங்குமாறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய இழப்பீடு கிடைப்பதை உறுதி செய்யுமாறும், அவர்களும் அவர்களது பிரதிநிதிகளும் நிதியை வழங்குவதில் முழுமையாக கலந்தாலோசிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும் என்றும் ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் பற்றிய முன்னைய விசாரணைகளின் முழுமையான கண்டுபிடிப்புகளை வெளியிட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜெர்மி லோரன்ஸ் வலியுறுத்தினார். (நி)

## கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனாவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும்

### இலங்கை நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சீனாவிடமிருந்து அடுத்த சில நாட்களில் பதிலை எதிர்பார்ப்பதாக இலங்கையின் திறைசேரியின் பிரதி செயலாளர் பிரியந்த ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கை சீனாவிடமிருந்து அடுத்த சில நாட்களில் நிதி உத்தரவாதத்தினை பெற முடியும் என கருதுகின்றது இதன் மூலம் சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து 2.9 மில்லியன் டொலர் கடனுதவியை பெறுவது சாத்தியமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. இந்த உத்தரவாதம் கிடைத்ததும் இலங்கை சர்வதேச நாணயநிதியத்தின் உதவியை நாடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## உள்ளூராட்சி தேர்தல் விவகாரம் இதுவரை 15 முறைப்பாடுகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஏற்கும் பணிகள் ஆரம்பித்த முதல் நாளில் இருந்து இது வரை 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். (நி)

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் வீடுகளுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் பாதுகாப்பிற்காக குறைந்தது இரண்டு ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களாவது ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவருக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக பொலிஸாருக்கும் இருவேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஆவது...

அத்துடன், தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு இந்தியா தொடர்ச்சியாக அழுத்தங்களை அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கருக்கும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான ஒருமித்த சந்திப்பு நேற்று வெள்ளிக் கிழமை கொழும்பில் உள்ள இந்திய தூதுவராலயத்தில் நடைபெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில், தமிழரசுக் கட்சியின் சார்பில் இரா. சம்பந்தன், மாவை சேனதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ஜனநாயக) சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் அழைக்கப்பட்டிருந்தபோதும், அவர் சந்திப்பில் கலந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டதாக உயர்ஸ்தானிகரகத்திற்கு அறிவித்துள்ளார்.

இதன்போது சம்பந்தன் முதலில் கருத்துக்களை வெளியிட்டார். அவர் "இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சரித்திரரீதியாக காணப்படுகின்ற உறவுகள் பற்றிச் சுட்டிக்காட்டியதுடன் தமிழ் மக்கள் இலங்கையின் பாகத்தில் சரித்திரபூர்வமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஆகவே அந்த மக்கள் உள்ளக சுயநிர்ணய உரித்துக்கு சொந்தமுடையவர்கள். இது ஐக்கிய நாடுகள் சாசனத்திலும் காணப்படுகின்றமை உள்ளிட்ட விடயங்களை சுட்டிக்காட்டினார்.

இச்சமயத்தில் குறுக்கீடு செய்த அமைச்சர் ஜெய்சங்கர், நாடு தற்போது முக்கியமானதொரு கட்டத்தில் உள்ளது. பொருளாதார நிலைமகள் மிகவும் சீர்குலைந்துள்ள. இவ்வாறான நிலையில் அடுத்த கட்டம் நோக்கி உங்களது நிலைப்பாடுகள் எவ்வாறு உள்ளன என்று வினவினார்.

அதன்போது, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். அதன் ஊடாகவே அனைத்துவிதமான பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் காண முடியும் என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இந்தியா கரிசனை கொண்டுள்ளது. அதற்கமைவாகவே 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் மேற்கொள்ளப் பட்டது. இருப்பினும் அது இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றார்.

இதனையடுத்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தனது நிலைப்பாடு ஏனையவர்களின் நிலைப்பாடுகளுடன் மாறுபட்டுக் காணப்படுவதாக குறிப்பிட்டதோடு, ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதானது தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான அதிகாரங்களை பகிர்வதாக அமையாது. ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பகிரப்பட்டால் அவை மீண்டும் இலகுவாக மத்திய அரசாங்கத்திடம் மீளச் சென்றுவிடும்.

இதற்கு உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகள் உதாரணங்களாகக் காணப்படுகின்றன.

ஆகவே, ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச் சட்டத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு முழுமையான சமஷ்டி அடிப்படையில் தான் தமிழர்களுக்கான தீர்வு அமைய முடியும். அதன் மூலம் அந்த மக்களின் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றார்.

இதன்போது, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், சமஷ்டிக் கோரிக்கையை நான் நிராகரிக்கவில்லை. ஆனால் இலங்கையின் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டமே காணப்படுகின்றது. அதனைக்கூட இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இழுபறியான நிலைமைகள் காணப்படுகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுதான் உடனடிச் சாத்தியமாகவுள்ளது எனத் தெரிவித்தார். (4-7)

## நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை வெல்லுமா இந்தியா?

நியூசிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் ஹைதராபாத்தில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்தியா போராடி வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மோதும் 2 ஆவது ஒரு நாள் போட்டி இன்று சத்தீஷ்கர் மாநிலம் ராய்ப்பூரில் பி.ப 1.30 மணிக்கு தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியா வெல்லும் பட்சத்தில் தொடரைக் கைப்பற்றலாம். (6)

## இலங்கை...

சட்டவாக்கத்துறையில் நேரடியாகத் தலையிடுகின்றது.

பாராளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரம் முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. பாராளுமன்றத்தைச் சபா நாயகர் நிர்வகிக்கவில்லை, நிறைவேற்று அதிகாரமே நிர்வகிக்கின்றது.

பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் அரசு செயற்படுகின்றது. நான் எழுதிய சட்டப் புத்தகங்கள் அனைத்தையும் குப்பைத் தொட்டியில் போடுமாறு பல்கலைக் கழகங்களுக்கு அறிவிக்கவுள்ளேன். இது ஜனநாயக நாடா என்பதை உலகம் அவதானிக்க வேண்டியது அவசியமாகிவிட்டது எனத் தெரிவித்தார். (4-7)

# தை மாத இராசி பலன்கள் 15.01.2023-12.02.2023

## தனுசு

**பிறர் உள்ளத்தில் உள்ளதை சுலபமாக அறியும் தனுசு இராசிவாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் பாதச்சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உங்கள் இராசியிலேயே சப்தம ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானாதிபதியான புதன் வீற்றிருக்கிறார். எனவே நினைத்த காரியங்கள் நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

இம்மாதம் உங்கள் இராசி நாதன் குரு சொந்த வீட்டில் சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். எண்ணிய காரியங்கள் எளிதில் முடியும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். வாக்கு ஸ்தானத்தில் சனி. சூரியன், சுக்கிரன் சேர்க்கை இருப்பதால்,

ஒருசில சமயங்களில் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாமல் போகலாம். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் சூழ்நிலை உண்டு. வருமானப் பற்றாக்குறை அகலும். 5 இல் ராகுவும் 11 ஆம் இடத்தில் சந்திரனோடு கேதுவும் உள்ளனர். 6 இல் செவ்வாய் இருக்கிறார். ஜென்ம இராசியில் புதன் சஞ்சரிக்கிறார்.

எனவே பிள்ளைகளின் வழியில் விரயங்கள் ஏற்படலாம். கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியப் பாதிப்புகள் உண்டு. ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ராகு இருப்பதால் பொதுவாழ்வில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுங்கள். வீண் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. இரண்டு முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை நல்லதல்ல. உங்கள் இராசிக்கு சனி நன்மை செய்யும் கிரகம் என்பதாலும் ஆதிபத்யங்களின் அடிப்படையில் நன்மை தரும் இடங்கள் என்பதாலும் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் பெற்றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகும். புதிய கூட்டாளிகளை நம்பி எதுவும் செய்ய இயலாது. யாருக்கேனும் வாக்குக் கொடுத்தால் கொடுப்பதற்கு முன் யோசிப்பது நல்லது. பணி புரியும் இடத்தில் பணப் பொறுப்பில் இருப்பவர்கள் மிகமிக கவனத்தோடு செயற்படுவது நல்லது.

வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மறுப்பர். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களால் சில பிரச்சினைகள் வரலாம். தேவைக்கேற்ற பணம் வந்தாலும் மன நிம்மதி இருக்காது.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். சகாய ஸ்தானத்திற்கு சுக்கிரன் வருகையில், உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வெற்றிக்குரிய செய்திகள் வீடு வந்து சேரும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் கிடைக்கும். பய உணர்வு மாறும். வரவேண்டிய பதவி உயர்வு தானாக வந்து சேரும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் புதனால், தன வரவு திருப்திகரமாக இருக்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். நட்பால் நன்மை கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தும் வாய்ப்பு கிடைக்கும். சேமிப்பு உயரும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். இம்மாதம் புதன்கிழமை தோறும் கிருஷ்ணர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

## மகரம்

**எந்த நேரத்தில் எதைச் செய்தால் வெற்றி பெறலாம் என்றறிந்த மகர இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு அஷ்டமாதிபதி சூரியனும், பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான சுக்கிரனும் இணைந்திருக்கின்றனர். எனவே விரயங்கள் அதிகரிக்கும்.

வீடு மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம். கொடுக்கல் - வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. இழப்புகள் வராமல் இருக்க விழிப்புணர்ச்சி தேவை. குடும்பப் பிரச்சினை தலை தூக்கும். எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நேரம் இது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு அஷ்டமாதிபதி சூரியனும் பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரனும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். எனவே தொழிலில் குறுக்கீடு அதிகரிக்கும். எதிரிகள் பயம் மேலோங்கும். அரசு வழி பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு குறையும். 4 இல் ராகுவும் 10 இல் கேதுவோடு சந்திரனும் இருக்கின்றனர். இதனால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். ஆகாரத்தில் கட்டுப்பாடு அவசியம். செவ்வாய் புத்திர ஸ்தானத்தில் இருப்பது யோகம் தான். "படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை இல்லையே" என்ற கவலை அகலும். நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் அடிக்கடி மனக் குழப்பத்திற்கு ஆளாவீர்கள். எதையும் தன்னிச்சையாகச் செய்ய இயலாது. குரு 3 இல் சொந்த வீட்டில் பலம்பெற்றிருப்பதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். மறைந்த புதனால் நிறைந்த நன்மைகள் உண்டு.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசி நாதனாகவும் தனாதிபதியாகவும் விளங்குபவர் சனி. அவரோடு அஷ்டமாதிபதி சூரியன் இணைவது அவ்வளவு நல்லதல்ல. திடீர் விரயங்கள் ஏற்படும். அரசுவழிப் பிரச்சினைகளால் மனசங்கடம் அதிகரிக்கும். கணக்கு வழக்குகளை கச்சிதமாக வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். வீண் பழிகள் ஏற்படும். உங்களிடம் அளித்த பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்தால் அது நடைபெறாமல் போகலாம். "பணி நிரந்தரம் ஆகவில்லையே" என்று கவலைப்படுவீர்கள். பணப்பொறுப்பில் இருப்பவர்கள் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு இருப்பதே உத்தமம்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம் திகிதி கும்ப இராசிக்குச் செல்கிறார். தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகமான நேரம்தான். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். எதிர்பார்த்த லாபம் இல்லம் வந்து சேரும். கொடுக்கல் - வாங்கல் சரளமாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. உத்தியோகத்தில் நீண்ட காலமாக தடைபட்டு வந்த பதவி உயர்வு இப்போது கிடைக்கும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்குள் பிரவேசிக்கும் புதனால், உத்தியோகத்தடை அகலும். உயரதிகாரிகள் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரத்தை வழங்குவர். கேட்ட சலுகைகள் கிடைக்கும். நல்ல நிறுவனங்களில் பணிபுரிய அழைத்தாலும் அதை உபயோகப்படுத்திக்கொள்ள இயலாமல் "இருக்கும் இடத்திலேயே நீடிக்கலாம" என்று நினைப்பீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையக மக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு கண்டியில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கலஹா எனும் கிராமத்தில் ஓர் ஆச்சிரமத்தினை சிவபூமி அறக்கட்டளையினர் கடந்த புதன் கிழமை திறந்து வைத்தனர்.

இத்திறப்பு விழா சிவபூமி அறக்கட்ட ளையின் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.


# பதவி வெற்றிடம்

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் DAP திட்ட இணைப்பு நில்லயத்திற்கு ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல்.

01. பதவி - **மாவட்டத்திற்கான திட்ட அலுவலர்**
    தகைமை - க.பொ.த.உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
    கள ஆய்வு (80%) விறியோக நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லல்
    செயற்றிட்டங்களை திறமையுடன் முன்கொண்டு செல்லல்.
    M.S.OFFICE மென்பொருள் கையாளும் திறன்.
    வேதனம் - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 4/2008
    சுற்றுநிருபத்திற்கு அமைவாக 12 ஆவது சம்பளத் திட்டத்திற்கு அமைவாக
    அடிப்படைச் சம்பளம் -16780.00
    வாழ்க்கைப்படி - 7800.00
    விசேடபடி -5000.00
    செயலாற்றுகைப்படி -1000.00

02. பதவி - **மாவட்டத்திற்கான திட்ட உதவியாளர்**
    தகைமை - க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தி
    கள ஆய்வு (90%) விறியோக நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லல்.
    செயற்றிட்டங்களை திறமையுடன் முன்கொண்டு செல்லல்.
    அறிக்கை எழுதுதல் தொடர்பாடல் திறன்.
    M.S.OFFICE மென்பொருள் கையாளும் திறன்.
    வேதனம் - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 4/2008
    சுற்றுநிருபத்திற்கு அமைவாக 13 ஆவது சம்பளத் திட்டத்திற்கு அமைவாக
    அடிப்படைச் சம்பளம் -16365.00
    வாழ்க்கைப்படி - 7800.00
    விசேடபடி -5000.00
    செயலாற்றுகைப்படி -1000.00


பதவிகளுக்கு முதலில் ஆறுமாத கால ஒப்பந்தம் செய்தே நியமிக்கப்படுவர். புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் நிழற்பிரதிகளையும் இணைத்து "தலைவர், ப.நோ.கூ.சங்கம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு என்னும் விலாசத்திற்கு 2023.02.03 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைப்பதுடன் விண்ணப்பிக்கும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். (சி-5822)

**தலைவர், திரு.வ.அன்னலிங்கம்,**
**புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு.**


# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் நாகரத்தினம்



தோற்றம் 26.10.1948 — மறைவு 17.01.2023

*கரணவாய் சித்தம் பாதியைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நாகரத்தினம் 17/01/2023 அன்று காலமானார்.*

*அன்னார் தர்மலிங்கம் ஈஸ்வரி அவர்களின் அன்பு மகனும், கதிரவேலுகனகம்மாவின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், தீசன் (ஜேர்மன்), வாசன், கேர்கிலா (லண்டன்), அமரர்.நேசன், உமா, வில்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர். செந்து வேலாயுதம், மேனகா, சிவசாமி, சீத்தாலட்சுமி, அமரர். கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர்.குலசேகரம், அமரர்.சிவஞானம், அமரர்.தங்கராசா, குலநாயகம், ஆகியோரின் மைத்துனரும், தமிழினி, மாலதி, சிவகுமார், சீலன், சரிதா ஆகியோரின் மாமனாரும்,*

*கரிணன், சாரா, கசி, தர்சிகா, சுபாஸ், லசனா, சுலக்சனா, கேதீஸ், பிரியா, சோழன், சந்தியா, சபரிசன் ஆகியோரின் பேரனும், தஸ்மியின் பூட்டனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 22/01/2023 ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் (விசுவமடு) நடைபெற்று தகனக் கிரியைக்காக 12 ஆம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.* *(14341)*

**தகவல்: குடும்பத்தினர்**

# இராசிபலன்

21.01.2023
தை 07, சனிக்கிழமை
அமாவாசை பின்னிரவு 3.27 மணிவரை

பூராடம் முற்பகல் 9.35 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்

**வளவன்**




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.




உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.




சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறப்பான நாள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.





பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பண வரவால் சந்தோசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், களஸ்திர நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.




காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல்பாராது அயராது பாடுபடுவீர்கள்,. போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**நல்ல குடும்பங்களில் தான் சோதனைகள் ஏற்படுகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலரை சந்தித்த இராணுவ கட்டளைத் தளபதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனை, யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த சந்திப்பில், யாழ்ப்பாண மாவட்டத்தில் விடுவிக்கப்படாத காணிகளின் விபரங்கள் தொடர்பாகவும் முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களை மீளக்குடியேற்றுதல் தொடர்பாகவும் விவசாயம் சார் உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அண்மைக்கால நிலைப்பாட்டின் மேம்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.



இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-6-33)

## தேசிய கல்வியியற் கல்லூரிக்கான புதுமுக மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வு

(அராலி)

யாழ். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கான நேர்முகத் தேர்வு இம்மாதம் 25 - 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறும் என யாழ். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை முழுவதும் உள்ள தேசிய கல்விக் கல்லூரிகளுக்கான புதுமுக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு இம் மாதம் தை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் மாசி மாதம் மூன்றாம் திகதி வரை இடம்பெறும் என உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.இந் நிலையில் யாழ்.கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கான நேர்முகத் தேர்வு மேற் குறித்த திகதிகளில் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.(நி-6-104)

## செயன்முறை பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் நோக்கத்தோடு இன்றும், நாளையும் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி எய்திய மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 24 பரீட்சார்த்திகளுக்கு செயன்முறை பயிற்சிப்பட்டறை இடம் பெறவுள்ளது என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் தலைவர் ரி.கருணாகரன் அறிவித்துள்ளார். (6)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் பாலஸ்தாபன கும்பாபிஸேகமும், இராஜகோபுர பூமி பூஜையும் நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 6.35 மணி தொடக்கம் 7.55 மணிவரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது. (6)

## சுயேட்சை வேட்பாளராக போட்டியிடவுள்ள வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர்

(கரணாய்)

வல்வெட்டித்துறை நகர சபையின் தற்போதைய தலைவர் இ.சுரேன் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடவுள்ளார்.

அதற்கான கட்டுப் பணம் கடந்த புதன்கிழமை செலுத்தப்பட்டது.

இ.சுரேன் தலைமையில் தற்போது நகர சபையின் உறுப்பினர்களாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருவரும், ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் ஒருவரும் சுயேட்சையாகப்போட்டியிடுகின்றனர். (நி-6-60)

## ஜனன தினநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி வடக்கு இராமகிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையத்தில் சுவாமி விவேகானந்தரின் 161 ஆவது ஜனனதின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 தொடக்கம் 12 மணிவரை பருத்தித்துறை ஆஸ்ரம பிரார்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6)

## உள்ளூராட்சி தேசிய வாசிப்பு மாதம்-2022

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபையின் உள்ளூராட்சி தேசிய வாசிப்பு மாதம்-2022 நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் காரைநகர் பிரதேச சபை தவிசாளர் சு.பாலசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். உள்ளூராட்சி அலுவலக உதவி ஆணையாளர் பொ. ஸ்ரீவர்ணன் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

# சுதந்திரம் இல்லாத நாட்டில் எதற்காக சுதந்திர தின கொண்டாட்டம்?

## விமல் ரத்நாயக்க கேள்வி

(யாழ்ப்பாணம்)

சுதந்திரம் இல்லாத நாட்டில் எதற்காக கோடிக்கணக்கில் செலவழித்து சுதந்திர தினம் கொண்டாட வேண்டும்? என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பி இருந்தார்.

யாழில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நாட்டில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களை விரட்டுவதற்கு ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட பல இளைஞர்கள்,யுவதிகள் தற்போதும் சிறையில் வாடுகின்றார்கள். அவ்வாறான நிலையில் சுதந்திர தினம் தேவைதானா ?

முதலில் அவர்களுக்கு விடுதலையை கொடுங்கள். அதன் பிறகு நீங்கள் சுதந்ந்திர தினத்தை கொண்டாடலாம். அதேவேளை, உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் அடிப்படையில் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும்.

கடந்த வருடம் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்ட சபைகளுக்கான தேர்தல் கட்டாயமாக மார்ச் 20 க்கு முன்னர் நடத்தப்படவேண்டும். இந் நிலையில் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு கோடிக் கணக்கான பணத்தினை செலவழிக்க இருக்கின்றனர்.

ஒரு நாட்டில் ஒரு தேர்தலை நடத்தி ஜனநாயக முறைப்படி மக்கள் ஒரு புதிய ஆட்சி முறையை உருவாக்குவது மக்களுக்குள்ள ஜனநாயக உரிமை.

அதனை இந்த அரசாங்கம் பிற்போடுமாக இருந்தால் தோல்வியடைந்த அரசாகவே நாங்கள் கருத வேண்டி வரும் என தெரிவித்தார். (நி-6-33)

## ஸ்ரீ சத்யசாய் வேத பாடசாலை தொடக்கவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயிபாபா அமைப்பின் வட பிராந்திய ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாட்டில் ஸ்ரீ சத்யசாய் வேத பாடசாலை, மானிப்பாய் மற்றும் ஸ்ரீ சத்ய சாய் மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனம் இலங்கை ஆகிய வற்றின் தொடக்க விழா மற்றும் பகவான் ஸ்ரீ சத்யசாய் பாபாவின் தாமரை மலர் பாதங்களில் அவற்றை அர்ப் பணிக்கும் நிகழ்வு நாளை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை மானிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கை, ஸ்ரீ சத்ய சாய் பாடசாலையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சாய் சகோதரர் ஸ்ரீ வேதநாராயண் கொல்லங்கோடே விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

# கேரளக் கஞ்சாவுடன் மீசாலையில் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹேந்திரா பிக்கப் ரக வாகனத்தில் கஞ்சாவினை கொண்டு சென்ற சமயம் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது 352கிராம் 250 மில்லிக்கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன்-பிக்கப் ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# வெளிநாட்டில் இருந்து பெற்ற பணத்தில் கல்வியங்காட்டில் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் வர்த்தக நிலையம் மீதும், வர்த்தகர் மீதும், வெளிநாட்டில் வசிக்கும் நபரிடம் பணத்தினை பெற்றுக் கொண்டே தாக்குதல் மேற்கொண்ட கூலிப்படையினர் வர்த்தக நிலையத்தில் இருந்து 5 இலட்சம் ரூபாய் பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தமது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.ரி.வி கமரா பதிவுகளின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார், யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், தாக்குதலாளிகளை அடையாளம் கண்டுள்ளதாகவும், வெளிநாட்டில் உள்ள ஒருவரிடம் பணத்தினை பெற்றுக்கொண்டே தாக்குதலை மேற்கொண்டு உள்ளனர் என தமது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் பணத்தினை பெற்றுக்கொண்டு கூலிப்படையாக தொழிற்படும் குழுக்கள் தொடர்பிலான தகவல்கள் தமக்கு கிடைக்கப்பெற்று உள்ளதாகவும் அதன் அடிப்படையில் கூலிப்படையாக இயங்கும் நபர்களை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் விசேட பொலிஸ் குழுவொன்று செயற்படுவதாகவும் தெரிவித்தனர். (நி-6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காக இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை நல்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகள் மற்றும் நட்புறவின் பேணலை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இது நாளுக்கு நாள் வலுப்பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி)

## மரக்கறிகளின் மொத்த விற்பனை விலையில் கணிசமான வீழ்ச்சி

(கொழும்பு)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் மொத்த விற்பனை விலை கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் கோவா, கெக்கிரி, வெள்ளரிகாய், தக்காளி ஆகியவற்றின் மொத்த விலை சுமார் 60% வரை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

ஒரு கிலோகிராம் தக்காளி 100 ரூபா முதல் 110 ரூபாவிற்கும் இடைப்பட்ட விலையிலும் ஒரு கிலோகிராம் கோவா 40 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், சில்லறை விலையில் எந்த குறையும் இல்லை என நுகர்வோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (நி)


ஓம் ஸ்ரீ சாய்ராம்

### சிறப்புச் சொற்பொழிவு
### ஆற்றுபவர்: ஸ்ரீ வேதநாராயண் கொல்லங்கோடே

(பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் அரவணைப்பில் 50 வருட காலம் வாழ்ந்துவரும் வேத அறிஞர்.பிரசாந்தி நிலையம், புட்டபர்த்தி, இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்.)



இடம் - ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபம், கோவில் வீதி, நல்லூர்
காலம் - 21.01.2023 சனிக்கிழமை
நேரம் - மாலை 04 மணி தொடக்கம் 06 மணிவரை.
தலைப்பு - மனித சமுதாயத்திற்கு வேதத்தின் முக்கியத்துவம், வேதத்தினை கற்பித்தலின் முக்கியத்துவம், பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடன் எனது அனுபவம்.

இந்த அரிதான, ஆனந்த மயமான நிகழ்வுக்கு உங்களை மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஜெய் சாய்ராம்! (14337)

Sri Sathya Sai Overseas Organisation- Srilanka (Affiliated with Sri Sathya Sai Global Council Prasanthi Nilayam, Puttaparthi, India



"வீரமாகாளி திருத்தாள் போற்றி"
"வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்"

### அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

**கா.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான சிறப்பு வழிபாடு - 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை**

**வழிபாடு ஆரம்பம் காலை 8.00 மணி.**

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிவப்பு மாலை அல்லது பூ எடுத்து வந்து காயத்திரி அம்பாளுக்கு அணிவித்து அர்ச்சனை செய்து தங்களது கையினால் அம்பாளுக்கு நீர் ஊற்றி வெற்றியின் அடையாளமான பச்சை நூல் அணிந்து சிறப்பு பிரார்த்தனை செய்வதற்கு ஆலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறித்த வழிபாட்டில் பங்கேற்று பரீட்சையில் சிறப்பு சித்தி பெற தாயாரின் திருவருளை பெற்றுய்வீர்களாக.

விஷேட அறிவிப்பு:
ஆலயத்தில் சுவாமி தூக்குவதற்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை என்றும் வாகனத்துடன் மட்டும் அனைவரும் சுவாமி காவி கொள்ள முடியும் என்பதை பகிரங்கமாக அறியத்தருகின்றேன். ஒரு சிலரால் சமூக முரண்பாட்டை தோற்றுவிக்கும் பொருட்டு பொய் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது என்பதையும் அம்பாள் அடியவர்களுக்கு வெளிப்படையாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

தெளிவே என்சிந்தனை.

இங்ஙனம்
இராஜ ஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதம குருவும் - ஆதீனகர்த்தாவும்
மேற்படி தேவஸ்தானம். (C-5820)



### கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1985 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: சூரி , செவ் 6 இல்
உயரம்:6'
தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/13275

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா:40 சூரி 11 செவ் 5 இல்
உயரம் :5' 8"
தகைமை/தொழில்: A/L வியாபாரம் (சொந்தக்கடை)
எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13276

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: சூரி 8 செவ் 11 இல்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: A/L TO
எதிர்பார்ப்பு: நிரந்தரதொழில் புரியும் பெண்
தொ.இ: B/13278

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 16 ½ சூரி 10 செவ் 3 இல்
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்: O/L வியாபாரம் கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13279

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா:45 சூரி 9 செவ் 8 இல்
உயரம்: 5' 1"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்
தொ.இ: G/11786

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா:25 ¼ சூரி 3 செவ் 2 இல்
உயரம்:5' 1"
தகைமை/தொழில்: HNDA IT
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/11802

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 28 ½ சூரி. செவ் 1 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/11816

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சதையம் 3
கி.பா: 32 ½ சூரி 11 செவ் 3 இல்
உயரம்: 5' 1"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: உத்தியோகம் அல்லது வெளிநாடு
தொ.இ: G/11819

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா500 அறவிடப்படும்.



### மணிவிழா நாயகியின் சேவை நலன் பாராட்டு



திருமதி. அன்னகிறேஸ் செல்வராணி சாள்ஸ்

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி 02.01.2020 முதல் 31.12.2022 வரை உப அதிபராகவும், இக்காலப்பகுதிக்குள் 05.03.2021 முதல் 01.05.2021 வரை பதில் அதிபராகவும் சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

சேவைக்காலம்

| பாடசாலை | | |
|---|---|---|
| 1. யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் | 15.10.1990 | - 02.01.2000 |
| 2. யா/திருக்குடும்ப கன்னியர் மடம் | 03.01.2000 | - 04.04.2001 |
| 3. யா/நாவாந்துறை றோ.க.பாடசாலை | 05.04.2001 | - 09.09.2001 |
| 4. யா/நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம் | 10.09.2001 | - 21.09.2011 |
| 5. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் | 23.09.2011 | - 31.12.2022 |

(14309)

வாழ்த்துவோர்: பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## பாகம் - 1

## காவியத் தொடர் 82





இங்கே அப்படி ஏமாந்து போகக் கூடாது. திருப்புறம்பயம் - பள்ளிப் படையென்றால், கங்க மன்னன் பிரிதிவீபதியின் பள்ளிப்படையைத்தான் சொல்லியிருக்க வேண்டும். அந்தப் பள்ளிப்படையைக் கட்டி நூறு வருடம் ஆகிறது. ஆகையால் பாழடைந்து கிடக்கிறது; சுற்றிலும் காடு மண்டிக் கிடக்கிறது கிராமமோ சற்றுத் தூரத்தில் இருக்கிறது அங்கே எதற்காக இவர்கள் போகிறார்கள்! இந்த இரண்டு பேரும் மட்டும் பேச வேண்டிய விடயமாயிருந்தால், இங்கேயே பேசிக்கொள்ளுவார்கள்.

காட்டு வழியில் ஒரு காததூரம் போக வேண்டியதில்லையே? ஆகையால், அங்கே இன்னும் சிலரும் வரப் போகிறார்கள் என்பது நிச்சயம். எதற்காக? பிரிதிவீபதியின் பள்ளிப் படையைப் 'பகைவனின் பள்ளிப் படையென்று இவர்களில் ஒருவன் சொல்வானேன்? பிரிதிவீபதி யாருக்குப் பகைவன்?

ஆகா! நாம் நினைத்தது உண்மையாகும் போலிருக்கிறதே! எதற்கும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இவர்கள் கொள்ளிடக் கரையோடு போகிறார்கள். நாம் மண்ணிக் கரையோடு போகலாம். மண்ணிக் கரையில் காடு அதிக அடர்த்தியாயிருந்தாலும் பாதகமில்லை. காடும் மேடும் முள்ளும் கல்லும் நமக்கு என்ன இலட்சியம்? அவை தாம் நம்மைக் கண்டு பயப்பட வேண்டும்!

இவ்வாறு எண்ணிக் கொண்டும் வாயோடு முணுமுணுத்துக் கொண்டும் திருமலை அரசமரத்திலிருந்து இறங்கிச் சற்றுத் தெற்கு நோக்கிப் போனான். மண்ணியாறு வந்தது அதன் கரையோடு மேற்கு நோக்கி நடையைக் கட்டினான்.

ஜன சஞ்சாரமில்லாத அடர்ந்த காடுகளின் வழியாக ஆழ்வார்க்கடியான் புகுந்து சென்று சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் திருப்புறம்பயம் பள்ளிப் படைக் கோயிலை அடைந்தான்.

### பத்தொன்பதாம் அத்தியாயம்

### ரணகள அரண்யம்

பழந்தமிழ்நாட்டில் போர்க்களத்தில் உயிர்துறந்த மகாவீரர்களின் ஞாபகமாக வீரக்கல் நட்டுக் கோயில் எடுப்பது மரபு. வெறும் கல் மட்டும் ஞாபகார்த்தமாக நாட்டியிருந்தால் 'நடுகற் கோயில்' என்று வழங்குவார்கள். அத்துடன் ஏதேனும் ஒரு தெய்வத்தின் சிலையையும் ஸ்தாபித்து ஆலயமாக எழுப்பியிருந்தால் அது 'பள்ளிப்படை' என்று வழங்கப்படும்.

குடந்தை நகருக்கு அரைக்காதம் வடமேற்கில் மண்ணியாற்றுக்கு வடகரையில் திருப்புறம்பயம் என்னும் கிராமத்துக்கருகில் ஒரு பள்ளிப் படைக் கோயில் இருந்தது. இது அந்தப் பிரதேசத்தில் நடந்த ஒரு மாபெரும் போரில் உயிர்நீத்த கங்க மன்னன் பிரிதிவீபதியின் ஞாபகமாக எடுத்தது.

உலக சரித்திரம் அறிந்தவர்கள் வாடர்லூர்ச் சண்டை, பானிபெத் சண்டை, பிளாசிச் சண்டை போன்ற சில சண்டைகளின் மூலம் சரித்திரத்தின் போக்கே மாறியது என்பதை அறிவார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் திருப்புறம்பயம் சண்டை அத்தகைய முக்கியம் வாய்ந்தது.

நமது கதை நடந்த காலத்துக்குச் சுமார் நூறு ஆண்டு காலத்துக்கு முன்னால் அச்சண்டை நடந்தது. அதன் வரலாறு தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

'கரிகால் வளவன்' பெருநற் கிள்ளி, இளஞ்சேட் சென்னி, தொடித் தோட் செம்பியன் முதலிய சோழ குல மன்னர்கள் சீரும் சிறப்புமாக சோழ நாட்டை ஆண்டிருந்த காலத்துக்குப் பிறகு ஏறக்குறைய ஐந்நூறு அறுநூறு வருட காலம் சோழர் குலத்தின் கீர்த்தியை நீடித்த கிரகணம் பிடித்திருந்தது.

தெற்கே பாண்டியர்களும், வடக்கே பல்லவர்களும் வலிமை மிக்கவர்களாகிச் சோழர்களை நெருக்கி வந்தார்கள்.

கடைசியாக, சோழ குலத்தார் பாண்டியர்களின் தொல்லையைப் பொறுக்க முடியாமல் அவர்களுடைய நெடுங்காலத் தலைநகரமான உறையூரை விட்டு நகர வேண்டி வந்தது. (தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்



## நடுவர் தீர்ப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

அந்த மணம் அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது. உப்புச் சப்பில்லாத தன் உணவையும் வெகுவாக ரசித்து ருசித்து உண்ண வைத்திருந்தது. அது தடைப்பட்டுப் போகவே, அவன் விடுதிக்காரனிடம் சென்றான்.

"ஐயா! அந்த ஆட்டு மாமிசத்தை இன்னும் கொஞ்ச நேரம் சுட்டுக் கொண்டிருங்களேன். அந்த வாசனையை அனுபவித்துக் கொண்டே நான் என் உணவை முடித்து விடுகிறேன்" என்று கேட்டுக் கொண்டான். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அவனும் தன் உணவை முடித்துவிட்டுச் சந்தோசமாக ஏப்பம் விட்டான்.

அன்று இரவு கழிந்து, பொழுது விடிந்தது. அவன் விடுதியை விட்டுப் புறப்பட்டான். தங்கியிருந்ததற்காக இடத்துக்குப் பேசிய வாடகைப் பணத்தைக் கொடுத்தான்.

ஆனால் அவர்கள் அவன் பிடித்த மாமிச வாசனைக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்றார்கள். அவன் அந்த அநியாயத்தை எதிர்த்து வாதிட்டான்.

அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. உச்சஸ்தாயியில் கூச்சல் போட்டார்கள். இவனும் பதிலுக்கு உரக்கக் கூவினான். கூட்டம் கூடி விட்டது. எல்லோரும் அவர்களை அந்த ஊர் நியாய அதிகாரியிடம் அழைத்துக் கொண்டு போனார்கள்.

அந்த அதிகாரி எல்லா விபரங்களையும் கேட்டு அறிந்து கொண்டார். சிறிது நேரம் வரை யோசித்தார். அவருக்கு ஒரு நல்ல முடிவு தென்பட்டது. நியாயம் வழங்குவதிலே சிறந்தவர் என்று பேர் எடுத்தவர் அவர்.

நிறையப் படித்தவர் பல கலைகளில் புலமை பெற்றவர், நல்ல புத்திமான் என்றும் சகலகலா வல்லவர் என்றும் அவரை எல்லாரும் போற்றினார்கள்.

பல சிக்கலான வழக்குகளிலே சாமர்த்தியமாக அவர் தீர்ப்பு வழங்கியிருக்கிறார். அந்த வழக்கிலும் அவர் அப்படித்தான் அருமையாக நியாயம் வழங்கினார்.

"கறியைத் தின்றவர்கள் அதற்கு விலையைக் கொடுத்தார்கள். கறியின் வாசனையைத் தான் இவர் பிடித்திருக்கிறாரே தவிர, கறியையே இவர் தின்னவில்லை.

கறியைத் தின்றவர்கள் விலையாகப் பணம் கொடுத்தார்கள். கறியின் வாசனையை அனுபவித்தவர் அதற்கு விலையாகப் பணத்தின் வாசனையை தருவது தான் நியாயம். ஆகவே விடுதிக்காரர் மூக்கிலே பணம் நிறைந்த பையை எடுத்துத் தேய்த்து அந்த வாசனையை அனுபவிக்க விட்டால் போதும்!"

இதுதான் அவர் வழங்கிய தீர்ப்பு. உடனே பணப்பையைக் கொடுத்து, விடுதிக்காரன் மூக்கிலே அதை அழுத்தித் தேய்க்குமாறு உத்தரவிட்டார். அவனும் பலம் கொண்ட மட்டும் அழுத்தித் தேய்த்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாரதத்தில் பார்த்தசாரதியின் தூதும் இலங்கையில் ஜெய்சங்கரின் விஜயமும்

பாரதப் போர் இடம்பெறுவதற்கு முன்னதாகப் பார்த்தசாரதி எனும் கண்ணபரமாத்மா துரியோதனனிடம் தூது செல்கிறார். தனது தூது வெற்றி தராதென்பது கண்ணனுக்கு தெரியாததல்ல. இருந்தும் தூது நடந்தது.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் கண்ணன், தூது சென்றதன் தேவை என்ன? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் கண்ண பரமாத்மாவின் செயல் வழி உபதேசம் உணர்த்தப்படுகிறது.

ஆம், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

தவிர, யுத்தம் என்பது இறுதிக்கட்டமானது. யுத்தத்துக்கு முன்னதாக சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சந்தர்ப்பம் கொடுத்தாக வேண்டும்.

அதைச் செய்யாது யுத்தம் நடத்தப்படுமாயின், அது அறத்தின் பாற்பட்டதாகாது.

இதுதவிர, போரை நடத்தவும் அதனைத் தவிர்க்கவும் பிரச்சினையைத் தீர்க்கவும் வல்லவராக யார் உளரோ அவர் சொல்வதைக் கேட்டாக வேண்டும்.

அதைக் கேட்கத்தவறும்போது இருப்பதையும் இழப்பதுதான் விதியாகிவிடும் எனும் தத்துவ உபதேசங்களை இப்பிரபஞ்சத்துக்கு உணர்த்தவே கண்ணபரமாத்மா துரியோதனனிடம் தூது செல்கிறார்.

சுருங்கக்கூறின், குருசேத்திரப் போரில் அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்த அதே கண்ண பரமாத்மா கௌரவர் தலைவனான துரியோதனனுக்குத் தனது தூதின் மூலம் உபதேசம் செய்தார்.

எனினும் அதனை துரியோதனன் உணரத் தலைப்பட்டிலன்.

ஆக, கண்ணபரமாத்மாவின் தூது என்பது தீர்வுக்கானது. இது மகாபாரதத்துக்கு உரிய தென்பதோடு,

இப்போது இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சிங்களத் தலைவர்களையும் தமிழ்த் தலைவர்களையும் சந்தித்து வருகிறார்.

இதில் தமிழ்த் தலைவர்களைக் கூட்டாகச் சந்திப்பது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

அது தொடர்பில் சந்திப்புகளும் நடைபெற்றிருந்த வேளையில், தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

ஆக, 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தி அதன்மூலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதே இந்தியாவின் முடிவு என்பதை இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் இலங்கை விஜயமும் உறுதி செய்கிறது.

இதிலிருந்து பாரதத்தில் கண்ண பரமாத்மாவின் தூதுபோல, இலங்கையில் ஜெய்சங்கரின் தூது அமைகிறது என்று கூறுவதில் தவறில்லை எனலாம்.

# கல்வி நிலையங்கள் முன்பாக அநாவசியமாக நடமாடும் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை

## பெற்றோர்கள் கோரிக்கை

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் முன்பாக அநாவசியமாக மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளில் காத்திருக்கும் இளைஞர்கள் குழுக்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அது தொடர்பில் பெற்றோர்களில் ஒருவர் தெரிவிக்கையில், மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்துள்ள நிலையில், போதைப்பொருளுக்கு எதிராக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் , பாடசாலைகளை சூழவுள்ள பகுதிகளில் அநாவசியமாக நடமாடுபவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் அவற்றை சூழவுள்ள பகுதிகளில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிலர் தேவையற்று நடமாடுகின்றனர்.

அவ்வாறானவர்கள் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யும் வலையமைப்பை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என எமக்கு பலத்த சந்தேகம் உள்ளது.

ஏனெனில் அவர்களின் நடமாட்டங்கள், ஆடைகள் என்பவை சந்தேகத்திற்கு உரியதாகவே உள்ளது. அதே வேளை மாணவிகளுடன் சேட்டை விடுவது, போக்குவரத்து விதிமுறைகளை மீறி போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்களை செலுத்துதல் போன்ற விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபடுகின்றனர். எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரினார். (4,7,33)

# மனநலம் பாதிக்கப்பட்டவர்களை புறக்கணிப்பதற்கு மாகாணத்தில் இடம் வழங்க முடியாது - வடக்கு ஆளுநர்

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களையும் இணைக்கக் கூடிய வகையில் மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஓட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை மற்றும் வழிகாட்டல்கள் மாகாண சுகாதார அமைச்சு உட்பட்ட அதிகார நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்தப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் நான் ஆளுநராக பதவியேற்ற காலத்தில் மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஓட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட நீதியாக ஒருங்கிணைக்க கூடிய நடைமுறை காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த செயற்திட்டத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கீழ் இணைப்பாளராக வைத்தியர் ஒருவரை நியமித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சிலர் மனநலம் குன்றியவர்களுக்கு ஏதும் செய்துவிடக் கூடாது அல்லது அவர்களை அப்படியே விட்டு விடலாம் என்ற குறுகிய நோக்கங்களை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் .

மனநலம் குன்றியவர்கள் மற்றும் ஓட்டிச நோயினால் பாதிக்கப்பட்டவர்களை சரியான முறையில் பராமரித்து அவர்களுக்கான சிகிச்சைகள் வழிகாட்டல்கள் மாகாணத்தில் வழங்கப்பட வேண்டுமே அல்லாமல் புறக்கணிப்புக்கு மாகாணத்தில் இடம் வழங்கப்படமாட்டாது.

ஆகவே வடக்கு சுகாதார அமைச்சுக்குரிய அதிகாரங்கள் சில மத்திக்கு ஏற்கனவே சென்றநிலையில் இருக்கும் அதிகாரங்கள் உரிய முறையில் செயல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4,7,33)

# 80 லீற்றர் கசிப்புடன் கட்டுவனில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுவன் பகுதியில் 80 லீற்றர் கசிப்புடன் 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த கைது முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், சான்றுப் பொருட்களுடன் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4,7,104)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் 2023 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 2.00 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலையின் பிரதி அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி இ.அபிராமி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ள அதேவேளை சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சைந்தவி ஜனார்த்தன் கலந்து கொள்ளவுள்ளார். (4,7)

# 18 வருடங்களின் பின்னர் மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

அஹுங்கல்ல, வெலிபட பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி துப்பாக்கியால் சுட்டு நபர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கு நேற்று முன்தினம் பலப்பிட்டிய மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, குற்ற வாளியாக அடையாளம் காணப்பட்ட நபருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளில் ஒருவர் 29 நவம்பர் 2021 அன்று உயிரிழந்த நிலையில், மற்றைய குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (நி)

# காதலனை அழைத்து கொலை செய்த காதலி

24 வயதான இளைஞர் அண்மையில் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இளைஞனின் காதலி கைது செய்யப்பட்டுள்ளார். காலி - அஹுங்கம, மிதிகம பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கூரிய ஆயுதத்தால் தாக்கி இளைஞர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் காதலி கைதாகியுள்ளார்.

தொலைபேசியில் தொடர்புகொண்டு இளைஞரை மிதிகமவிற்கு அழைத்த குறித்த பெண், அவரை கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து மஹரகம பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த நிலையில், சந்தேகநபரானபெண் 15 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கையில் 'நெமடோட்' தாக்கம்

## வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கையில் 'நெமடோட்' என்ற நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் நெற்செய்கையில் மஞ்சள் நிறமாதல் மற்றும் வளர்ச்சி குன்றுதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் உளுக்குளம், மடுகந்த மற்றும் அவுசதப்பிட்டிய போன்ற விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நெற்பயிரில் நெமடோட் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு நெமடோட் தாக்கம், பனிப்பூச்சியின் தாக்கம், முறையற்ற பசளை பயன்பாடு, கபிலநறப்புள்ளி நோய் போன்ற காரணங்களாக காணப்படுகின்றன.

நெற்பயிரை வேர்த் தொகுதிக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அகற்றி அதன் வேர்த் தொகுதியை கழுவி அவதானிக்கும் போது வேரின் நுனிப் பகுதி கொக்கி மட்டை போன்று வேர்த் தொகுதியில் முடிச்சு காணப்படும்.

இவற்றைக் கட்டுப்படுத்த நீர் பாய்ச்சும் போது வயற் துண்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லாதவாறு நீர் பாய்ச்ச வேண்டும்,

விவசாய உபகரணங்களை ஒரு வயலிலிருந்து மற்றுமொரு வயலிற்குக் கொண்டு செல்லும் போது நன்கு சுத்தப்படுத்தி செல்லவும், ஒரு வயலிலிருந்து மற்றுமொரு வயலிற்கு செல்லும் போது பாதங்களைச் சுத்தப்படுத்தி செல்லவும், தாக்கத்தை கண்டறிந்ததன் பின்னர் இறுதி தீர்வாக நெமடோட் நாசினியான எபமெக்சினை இடவும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள அருகிலுள்ள கமநல சேவைத் திணைக்களங்களை நாடவும் என அவர் தெரிவித்தார். (நி-6-299)

## தர்மலிங்கத்தின் சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். வி.தர்மலிங்கத்தின் திருவுருவச்சிலை திறப்பு விழா நாளை மறுதினம திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வலி.தெற்கு பிரதேச சபை சுன்னாகத்தில் பிரதேச சபை தவிசாளர் க. தர்ஷன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இச்சிலை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவால் திறந்து வைக்கப்படவுள்ளது. (4)

## வவுனியாவில் பொதுஜன பெரமுன வேட்புமனுத் தாக்கல் செய்தது



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக பொதுஜன பெரமுன நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்தது.

கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் வன்னி மாவட்ட பராளுமன்ற உறுப்பினருமான கே. காதர் மஸ்தான் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் தமது வேட்பு மனுவை கையளித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 5 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காகவே இவ்வாறு வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. (நி-6-299)

## தமிழரசுக் கட்சி பூநகரியில் வேட்பு மனுத்தாக்கல்

(முறிகண்டி)

தமிழரசுக் கட்சி பூநகரி பிரதேச சபைக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்தது. கடந்த புதன் கிழமை கரைச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச சபைகளிற்காக போட்டியிடும் வேட்பு மனு கையளிக்கப்பட்ட நிலையில், நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையில் வேட்பு மனு கையளிக்கப்பட்டது. (நி-6-100)

## 6 கிராம் ஹெரோயினுடன் மதவாச்சியில் ஒருவர் கைது



(நெளுக்குளம்)

மதவாச்சிப் பகுதியில் ஹெரோயின் தூளினை தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை கைது செய்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் பிற்பகல் மதவாச்சிப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஹெரோயின் தூள் தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவரை கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 6 கிராம் ஹெரோயின் தூள் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 50 வயதுடைய இரத்மலானை பகுதியைச் சேர்ந்தவரை கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-6-299)

## உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக

# இதுவரை 78 கட்டுப்பணங்கள் வவுனியாவில் செலுத்தப்பட்டுள்ளன

### தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

(குருமன்காடு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வவுனியாவில் கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் உள்ளடங்கலாக நேற்று முன்தினம் மாலை வரை 78 கட்டுப்பணங்கள் செலுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு இறுதிக் கட்டத்தை அடையும் நிலையில், வவுனியா மாவட்டத்தில் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் உள்ளடங்கலாக 78 கட்டுப்பணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு கட்சி வேட்பு மனுத்தாக்குதலையும் செய்துள்ளது எனத் தெரிவித்தனர். (நி-6-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 240 | 200 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| கோவா | 80 | 80 | 100 | 150 |
| கரட் | 200 | 200 | 250 | 200 |
| பூசணி | 100 | 160 | 140 | 150 |
| புடோல் | 280 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 450 | 500 | 800 | 700 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 500 | 350 | 300 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 340 | 350 | 400 |
| கறிமிளகாய் | 700 | 700 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1600 | 1600 |
| போஞ்சி | 300 | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 80 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 550 | 600 |
| முள்ளங்கி | 50 | 100 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- | 160 |

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை

# புனரமைத்து தருமாறு வன்னேரிக்குள மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தின் கட்டடம் மோசமாக சேதம் அடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவதனால் இதற்கான புதிய கட்டடத்தை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

வன்னேரிக்குளம், ஐயனார்புரம், ஆணைவிழுந்தான், ஜெயபுரம் உள்ளிட்ட கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படை மருத்துவ தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ள வன்னேரிக் குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமானது 1963 ஆம் ஆண்டு குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது அமைக்கப்பட்ட கட்டடத்திலேயே தற்போதும் இயங்கி வருகின்றது. குறித்த கட்டடமானது தொடர் யுத்தம் காரணமாக சேதமடைந்த நிலையில் மீள் குடியேற்றத்தின் பின்னர் புனரமைக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது குறித்த கட்டடமானது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

எனவே அந்த ஆரம்ப சுகாதார நிலைய பராமரிப்பு நிலைய கட்டடத்தினை புதிதாக அமைத்துத் தர வேண்டும் என பிரதேச பொது அமைப்புகளும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளத்தில் மூழ்கி...

ழந்தவர் குட்டியப் புலம் வசாவிளானைச் சேர்ந்த ஜெயசீலன் சியான் (வயது-12) என்ற சிறுவனாவான்.

மேற்படி சிறுவன் பொங்கல் தினத்துக்கு கோப்பாயில் உள்ள அப்பம்மா வீட்டுக்கு வந்ததாகவும் வீட்டுக்கு திரும்பி செல்லாது அங்கு தங்கி நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்படி சிறுவன் சக நண்பர்களுடன் கோப்பாய் கரவெட்டிகுளத்தைப் பார்ப்பதற்கு சென்றுள்ளார். இதன்போது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.(4-7,60)

## கிளிநொச்சியில்...

பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்கள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தலைமையில் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளில் சுயேட்சை குழுவாக ஒன்றிணைந்து போட்டியிட தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் உள்ளிட்ட ஏராளமான கட்சி ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் முடிவெடுத்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் மாவட்ட தலைமை இம்முறை ஆசனப்பங்கீடு விடயத்தில் கட்சிக்காக கடந்த காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களை புறம்தள்ளி, தகுதியானவர்களுக்கு இடம்கொடுக்காமல் தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஆசன ஒதுக்கீடுகளை மேற்கொண்டமையால் அதிருப்தி அடைந்த தொண்டர்கள் தனிவழியே தேர்தலை எதிர்கொள்ள முடிவெடுத்து மிகப்பெரும் மக்கள் ஆதரவோடு சுயேட்சை குழு 1 இன் மூலம் களத்தில் இறங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (4-7)

## குறைந்தது...

யின் அதிகபட்ச சில்லறை விலை 44 ரூபாயாகவும் சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாயாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவரினால் இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (4-7)

## 13வது திருத்த...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து, இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் இணைந்து அவர் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பினை நடத்தியிருந்தார்.

இந்தியாவுடனான கூட்டாண்மை, நாட்டின் பொருளாதார மீட்சியை எவ்வாறு எளிதாக்குவது என்பது குறித்து கலந்துரையாட ஜனாதிபதி விக்கிரமசிங்கவை விரைவில் இந்தியாவிற்கு வருகை தருமாறு, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கடிதத்தை கையளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் சமூகத்தின் தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் ஜெய்சங்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா, இலங்கையின் நம்பகமான அண்டை நாடு, நம்பகமான பங்காளி மற்றும் இலங்கைக்கு தேவை ஏற்படும்போது, எந்த தொலைவுக்கு செல்லத் தயாராக உள்ள ஒரு நாடு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது இலங்கைப் பயணம், பிரதமர் மோடியின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கைக்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கை என வலியுறுத்திய ஜெய்சங்கர், தேவைப்படும் நேரத்தில் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து துணை நிற்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், திருகோணமலையை ஒரு வலுசக்தி மையமாக மேம்படுத்தும் திறன் இலங்கைக்கு உள்ளது. அத்தகைய முயற்சிகளுக்கு நம்பகமான பங்காளியாக, இந்தியா தயாராக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒத்துழைப்பை முன்னோக்கி கொண்டு செல்லும், புதுப்பிக்கத்தக்க சக்தி கட்டமைப்புக்கு, கொள்கை அடிப்படையில் இன்று இணக்கம் எட்டப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (4-7)

## கோர விபத்து...

நேற்று விபத்துக்குள்ளானது.

இதில் வானில் பயணித்த 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் ஆட்டோவில் பயணித்த ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

ஹட்டன் டிக்கோயா பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற வான் ஒன்றை கொழும்பிலிருந்து பாடசாலை மாணவர்களை சுற்றுலாவுக்கு ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று மோதியதிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதில் பஸ்ஸில் பயணித்த 47 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பஸ் சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது என்றும், தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களை கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றி உடனடியாக சிகிச்சைகள் அளிக்கும்படி ஜனாதிபதி ரணில் உத்தரவிட்டுள்ளார். (4-7)

## நிதி...

உள்ளிட்ட நிபுணர்கள் குழாமினர் கொழும்பில் இரண்டு இடங்களில் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

தொழில்வல்லுநர்களின் சம்பளத்தின் மீதான புதிய வரிகளை நீக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளைமுன்வைத்து அவர்கள் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

தாமரை தடாகத்துக்கு அருகாமையில் போராட்டம் ஒன்று இடம்பெற்றதால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அத்துடன் நிதி அமைச்சுக்கு அருகில் இடம்பெற்ற இப் போராட்டம்காரணமாக காலிமுகத்திடலுக்கு செல்லும் வீதி லோட்டஸ் சுற்றுவட்டம் என்பவற்றின் ஊடான போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டிருந்தது. (4-7)

## கடன் மறுசீரமை...

அளித்ததன் மூலம் இலங்கையின் கடன்மறுசீரமைப்புச் செயன்முறைக்கு உதவியமைக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் சார்பில் இந்தியப் பிரதமருக்கும் இந்திய மக்களுக்கும் மனமுவந்து நன்றி கூறுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சருடான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொண்டு மீட்சிப்பாதையில் செல்வதற்கு எமது கடன்வழங்குனர்களிடமிருந்து உரிய காலத்தில் நிதியியல் உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டியிருந்தது.

அந்தவகையில் சர்வதேச நாணய நிதியத்திடம் தமது நிதியியல் உத்தரவாதத்தை அளித்ததன் மூலம் இலங்கையின் கடன்மறுசீரமைப்புச் செயன்முறைக்கு உதவிய முதலாவது நாடாக இந்தியா திகழ்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் சமூக அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான இந்தியக்கடனுதவி தொடர்பான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது எனத் தெரிவித்தார். (4-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 20/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1461
வெற்றி இலக்கங்கள்: மேஷம் 1 0 4 7 3 9
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.01.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1036
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 25 34 58 77

### கொவிசெத

திகதி 2023.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 3248
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 20 25 54 69
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 20/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1354
வெற்றி எழுத்து: G
சுப்பர் இலக்க: 17
வெற்றி இலக்கங்கள்: 02 21 32 59

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.20
சீட்டிழுப்பு இலக்கம் 315
வெற்றி இலக்கங்கள்: மேஷம் 09 19 41 52 மேஷம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/01/20
சீட்டிழுப்பு இலக்கம் 5006
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 3 7 3 2 1 1
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1981
நிறம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.01.20
தினம்: வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: O 02 08 10 63
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,625,660/-
DLB

### சனிதா

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.20
சீட்டிழுப்பு இல : 4142
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,946,240/-
வெற்றி இலக்கங்கள்: 06 36 38 60
ஆங்கில எழுத்து: C
DLB

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 277
சீட்டிழுப்பு திகதி 2023.01.20
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 23 38 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,631,400/-
DLB

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 5,221,904/-
திகதி 2023-01-20
வெற்றி வாரம் 3693
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்: 31 37 40 44
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,519,960/-
DLB

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 08 02 29 34 76
சீட்டிழுப்பு வாரம் 1157
வர்ணம் ஊதா
திகதி 2023.01.20 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 299,489,702.20
தொலைபேசி : 011-2 333 546-47
DLB

### அத கோடிபதி

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1807
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.01.20
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,409,380/-
வெற்றி இலக்கங்கள்: 06 11 34 73
ஆங்கில எழுத்து: V
DLB

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## English Classes

**Gr. 1 to O/L**

வீடு வந்து கற்பிக்கப்படும்

Grammar with School book

**077 331 4608**

யாழ்ப்பாணம் (14329)


வடக்கு மாகாண

## காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் வடமாகாண உதவிபணிப்பாளர் தி.விமலனுக்கு காரணம் இன்றி திடீரென கொழும்புக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலக வளாகத்துக்குள் இயங்கிவரும் இலங்கை காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வட மாகாண அலுவலகத்தின் பணிப்பாளராக விமலன் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில் காரணங்கள் ஏதும் கூறப்படாமல் நாளை மறுதினம் திங் கட்கிழமை தொடக்கம் கொழும்பு தலைமை அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்குமாறு மின்னஞ்சல் மூலம் இடமாற்றக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (4,7)


## TECHNO WORLD

தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L புதிய கல்வியாண்டு 2024

- திகதி : 23.01.2023 ( திங்கட்கிழமை)
- நேரம் : காலை 8.00

(ஆரம்பத்திலிருந்து செயன்முறை வகுப்புக்கள் நடைபெறும்)

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

**077 017 5346** (C-5823)



## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள பெண்களுக்கான அழகுக்கலை நிலையத்திற்கு தொழில் அனுபவமுள்ள நிரந்தரமாக வேலை செய்யக்கூடிய பெண் ஊழியர் தேவை.

யாழ் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். (C-5825)

**077 786 9760**



## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு அனுபவமுள்ள House Keeper & Waiter தேவை.

தொடர்புகளுக்கு . (14290)

**076 830 3931**



## ENGLISH LITERATURE

COMMENCES FROM February 5, 2023

- GRADE 9
- GRADE 10
- GRADE 11(PAPER CLASS)

NELLIADY
KALVIYAN KADU
THIRUNELVELI
JAFFNA TOWN

A



S.Muguntthan
English Lecturer

ONLINE & PHYSICAL ATTENDANCE

PANAL OF ENGLISH LECTURERS

CONTACT NO (14343)

**0777 880 330 / 0707 220 460**



## நெல்லியடியில் வாடகைக்கு

நெல்லியடி சந்தியில் இருந்து கொடிகாமம் வீதியில் 50 மீற்றர் தூரத்தில் சகல வசதிகளுடன்கூடிய இடம். (காரியாலயம், REST HOUSE, முகவர் நிலையங்கள், சிறு தொழில்களுக்கு) வாகன தரிப்பிடத்துடன் கூடிய இடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (C-5821)

**077 822 5333**



## வான் விற்பனைக்கு

EVERY SUZUKI JAPAN
உற்பத்தி வருடம் 2015
முதற்பதிவு 2019
விலை 43 இலட்சம் (14340)

**074 292 5923**



## காணி விற்பனைக்கு

கட்டுவன் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தெல்லிப்பளை வைத்தியசாலை கார்பெட் வீதியில் இருந்து 1 Km இல் மல்லாகம் கட்டுவன் வீதியில் இருந்து 600 m இல் வீதி ஓரத்தை முகப்பாக கொண்ட காணி பிரித்தும் கொடுக்கப்படும். (14310)

**077 525 0140**
**076 449 4166**



## கனடாவில் வேலைவாய்ப்பு, கல்வி-கருத்தரங்கு

Hotel Managment / Health care போன்ற துறைகளில் Work Permit எடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் Student Visa விற்கான ஆலோசனைகளும் அனுமதிகளும் கனடாவிலிருந்து வருகைதந்திருக்கும் அங்கிகரிக்கப்பட்ட கனடிய குடிவரவு ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும் (C-5824)

CANADA MIGRATION PILOT

திகதி- 21.01.2023 (சனிக்கிழமை) நேரம்- 12 மணி

கட்டணம் :- 2000/= (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

CIMS COLLEGE 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம் 0777-068-777



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம் (14342)

**077 814 7389, 077 986 5457**



## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு.

(நிலப்பரப்பு)




- ஆதிசிவன் முத்துமாரி அம்மன் கோவில் வீதியில்.
- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
- தென்மராட்சி கலைமன்றம் 100 மீ தூரம்.
- அரச வங்கி, தனியார் வங்கி 200 மீ தூரம்.
- சாவகச்சேரி சந்தை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் 300 மீ தூரம்.
- அமைதியான சூழல், நல்ல தண்ணீர்.

பார்வையிடும் நேரம் – காலை 8.00 – மாலை 6.00 மணி

விலை பேசித் தீர்மானிக்கப்படும் (14334)

**077 784 0379** Viber, Whatsapp
**077 467 2408, 074 001 5380**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம் (14342)

**077 986 5457, 077 814 7389**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org